ஜுஹூர், எந்த ஒரு ஹகீகத்தைக் கொண்டு ஆகிக்கொண்டிருக்கிறதோ அந்த ஹகீகத்தில் எந்த ஒரு மாறுதலும் இல்லாமல், ஒவ்வொரு வினாடியும் ஜுஹூர் புதிதாக ஆகும்.

ஒரு முறை உண்டான தஜல்லி (வெளிப்பாடு) மீண்டும் உண்டாவதில்லை .

உதாரணம் – 1 :

ஆற்று நீர் அல்லது கடல் நீர் ஒவ்வொரு வினாடியும் ஓடிக் கொண்டே இருக்கிறது. பார்வையில் அசைவற்ற நிலையில் இருப்பது போல் காட்சியளிக்கிறது. எனினும் ஹகீகத்தில் ஓடிக் கொண்டு தான் இருக்கிறது. ஒவ்வொரு வினாடியும் நம் பார்வை படும் இடத்தில் இருந்த தண்ணீர் அந்த இடத்தை விட்டும் அகன்று விடுகிறது. மறுபடியும் அந்த இடத்தில் அதே போன்ற புதிய தண்ணீர் தான் வருகிறது. இப்படியாக வந்து ஆற்று நீர் ஒரு நிலையில் காட்சியளிக்கிறது. அதன் தோற்றத்தில் எந்த வித்தியாசமும் தெரிவதில்லை.

உதாரணம் – 2 :

விளக்கின் ஜுவாலையில் ஒவ்வொரு வினாடியும் எண்ணெய் எரிந்து ஜுவாலையைக் காட்டிக் கொண்டு இருக்கிறது. பார்வையில் ஜுவாலை ஒரே நிலையில் இருக்கிறது. பார்வையில் ஜுவாலை ஒரே நிலையில் காணப்பட்டாலும் ஒவ்வொரு வினாடியும் முதல் ஜுவாலை அந்த இடத்தை விட்டும் அகன்று அதன் ஸ்தானத்தில் அதே போன்ற புதிய ஜுவாலை வந்து ஜுவாலையின் நிலையை ஒரே நிலையில் காட்டிக் கொண்டு இருக்கிறது.

<u>உதாரணம் – 3</u>

மின்சார விளக்கில் ஒளிச்சுடர் ஒவ்வொரு வினாடியும் கடந்து கொண்டே இருக்க, அந்த ஸ்தானத்தில் புதிய சுடர் கடந்து போன சுடரைப் போலவே இடைவிடாது வந்து கொண்டே இருக்கிறது.

ஒவ்வொரு வினாடியும் அது கடந்து கொண்டே இருக்கிறது என்பதை மீட்டர் கணக்கு நிரூபிக்கிறது. எனினும் அந்தச்சுடரில் எந்த விதமான மாறுதலும் தெரிவதில்லை. பார்ப்பதற்கு ஒரே நிலையில் இருப்பது போல் தெரிகிறது.

மேற்சென்ற உதாரணங்களில், ஆற்று நீர், விளக்கின் ஜுவாலை, மின்சார விளக்கின் ஒளிச்சுடர் போன்றவை ஒரு தடவை கடந்து சென்றது மறுபடியும் வருவது இல்லை, இதற்கு ***தஜல்லி*** *என்று சொல்லப்படும்.* ***தஜல்லிக்கு தக்ரார் கிடையாது.***

மேலும் ஜுவாலை போன்றவைகளின் ஹகீகத்தில் அவைகளின் தோற்றத்தில் எந்த விதமான மாறுதலும் இருப்பதில்லை.

இந்த விதமாகத்தான் நம்முடைய நிலைமையும், சர்வ சிருஷ்டிகள் நிலைமையும் இருக்கிறது.

மக்ஸதே பைஅத்

(பைஅத்தின் நோக்கம்)

'யாதே ஹக் அலத்தவாம், யாஃப்தே ஹக் '

அல்லாஹ்வை சதாகாலமும் ஞாபகம் செய்வதும். அல்லாஹ்வை அடைவதுமாக இருக்கும்.

وَاذْكُرِ اسْمَ رَبِّكَ وَتَبَتَّلْ إِلَيْهِ تَبْتِيلًا

அல்லாஹ்வின் பெயரை ஞாபகம் செய்யுங்கள். இன்னும் அனைத்தையும் விட்டு ஒதுங்கி அவன் பக்கம் சேர்ந்து விடுங்கள்.*(73;8)*

ஒரு காமிலான ஷைய்கிடம் பைஅத் செய்வதால் தஜ்கியதுன் நஃப்ஸ், தஸ்ஃபியதுல் கல்ப், தஜ்லியதுர் ரூஹ், தக்லியதுஸ் ஸிர், தம்லியதுன் நூர் ஆகியவைகள் கிடைக்கும்.

மக்ஸதே ஜிந்தகீ

(வாழ்க்கையின் நோக்கம்)

இபாதத், ஷனாகத் -அல்லாஹ்வை வணங்குவதும், அவனை அறிவதும்.

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ (قال ابن عباس رضى اي يعرفون)

திருக்கலிமாவின் விளக்கம்

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ

தர்கீபி மஃனா :

(لا) "லா" -என்பது நஃபி செய்யும் வார்த்தை.

(اله) "இலாஹ்"- என்பது இஸ்மே வஸ்ஃபி (நகிரா)

(لا) "இல்லா" -என்பது இஸ்திஸ்னா செய்யும் வார்த்தை

(الله) "அல்லாஹ்"- என்பது இஸ்மு ஜாத், முஸ்தஸ்னா.

திருக்கலிமாவின் பொருள் :

லா - எந்த ஒரு வஸ்துவும் இல்லை

இலாஹ்- மஃபூத், வணக்கத்திற்குத் தகுதியானவன். தேவைகளைப் பூர்த்தி செய்பவன். (தான் தேவையற்றவனாக இருந்து பிறருடைய தேவைகளைப் பூர்த்தி செய்பவன்)

இல்லல்லாஹ்- அல்லாஹ்வைத் தவிர

தன் தானே காயிமாகவும், மவ்ஜூதே ஹகீகியாகவும், உலூஹியத்திற்கு சொந்தக்காரனாகவும், இருப்பவன் அல்லாஹ் ஒருவன் தான் என்பதை உறுதிபடுத்துகிறது.

லா எதை நஃபி செய்கிறது ?

ஜாத்தே ஷய் ஸே வஸ்ஃபே உலூஹியத் கோ தாதன் நஃபி கர்த்தா ஹை

'லா' வாகிறது சிருஷ்டிகளில் காணப்படும் தேவைகளை பூர்த்தி செய்யும் தன்மை (உலூஹியத்) சிருஷ்டிகளுடைய ஜாத்திற்கு சொந்தமில்லை என்று நஃபி செய்கிறது.

உலூஹியத்தின் தஃரீஃப் : (பொருள்)

குதாபன் அல்லது குதாயிபன்

(அதாவது இறைத் தன்மை)

யே மர்தபா தகாஜா கர்த்தா ஹே ஃபனாயே ஆலம் கோ ஜனே பகாயே ஆலம் மே, பகாயே ஆலம் கோ ஜனே ஃபனாயே ஆலம் மே.

மூன்று வகை ஆலம்கள்

அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இலாஹ் இல்லை என்பதில் வேறு யாரும் என்பது எதைக் குறிக்கிறது?

சிருஷ்டிகளை- கைருல்லாவைக்- குறிக்கிறது.

சிருஷ்டிகள் மூன்று வகைப் படும் .

1.ஆலமே ஷஹாதத் 2.ஆலமே பர்ஜக் 3.ஆலமே அம்ர்

ஆலமே ஷஹாதத் :

இந்த ஆலத்தில் சிருஷ்டிகளுக்கு சூரத்(தோற்றம்)- ஷகல்(வடிவம்)- ரங்க்(நிறம்)- வஜன்(எடை)- மாத்தா(மூலப் பொருள்)- முத்தத்(தூரம், இடைவெளி) கிர்க், இல்தியாம்(முறிதல், சேருதல்) ஆகியவைகள் இருக்கும்.

இத்தகைய சிருஷ்டிகள் நான்கு வகைப்படும்,

1. இன்ஸான் (மனித வர்க்கம்),
2. ஹைவான் (மிருக வர்க்கம்),
3. நபாதாத் (தாவர வர்க்கம்),
4. ஜமாதாத் (தாது வர்க்கம்).

மனிதர்களில், காஃபிர், முஷ்ரிக், முனாஃபிக், முஸ்லிம், முஃமின், முத்தகி, வலி, குத்பு, கௌஸ், ஹத்தாகே முஸ்தஃபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உட்பட அனைவரும் அடங்குவார்கள்.

<u>ஆலமே பர்ஜக்</u>

இந்த ஆலத்தில் சிருஷ்டிகளுக்கு சூரத் (தோற்றம்), ஷகல் (வடிவம்), ரங்க் (நிறம்), முதலியவைகள் இருக்கும். வஜன் (எடை) மாத்தா (மூலப்பொருள்) முத்தத் (தூரம், இடைவெளி) கிர்க், இல்தியாம் (முறிதல், சேருதல்) ஆகியவைகள் இருக்காது.

கனவுலகில் காட்சியளிக்கும் சிருஷ்டிகள் அனைத்தும் இந்த வகையில் அடங்கும்.

<u>ஆலமே அம்ர்</u> :

இதற்கு சூபூத் இருக்கும்.ஆனால் முஷாஹதாவில் வராது. அதாவது இந்த ஆலத்தைச் சேர்ந்த சிருஷ்டிகள் உண்டு என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. ஆனால் பார்வைக்கு வராது. ரூஹ், இஷ்க், கியால் போன்றவைகள் இந்த வகையில் அடங்கும்.

<u>குறிப்பு</u>-ஆலமே ஷஹாதத்திற்கு ஆலமே கல்க், ஆலமே அஜ்ஸாம், மாத்தீ ஆலம், ஆலமே உன்சுரீ என்றும் சொல்லப்படும். ஆலமே பர்ஜக்கிற்கு ஆலமே மிஸால் என்றும் சொல்லப்படும். ஆலமே அம்ருக்கு ஆலமே கைப், ஆலமே நூர், ஆலமே அர்வாஹ் என்றும் சொல்லப்படும்.

இஜ்மாலாக- சுருக்கமாக மாத்தீ ஆலத்திற்கு **ஆலமே கல்க்** என்றும் கைரே மாத்தீ ஆலத்திற்கு **ஆலமே அம்ர்** என்றும் சொல்லப்படும். அம்ஸால், அர்வாஹ் இரண்டும் ஆலமே அம்ரில் சேர்ந்து விடும்.

أَلَا لَهُ الْخَلْقُ وَالْأَمْرُ

ஆலமே கல்கும் ஆலமே அம்ரும் அல்லாஹ்வுக்கே உரியன.இரண்டும் அவனுடைய மக்லூகாகவும் மில்க்காகவும் இருக்கின்றன.

இஃதிபாராத்தே உலூஹிய்யத்

உலூஹிய்யத்தின் இஃதிபாராத்துகள் – 4

1. ஜாத்,
2. ஸிஃபாத்,
3. அஃப்ஆல்,
4. ஆஸார்.

லா இலாஹ இல்லல்லாஹ்

வணக்கத்திற்கு தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை.

அதற்கு ஒரே காரணம் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய இலாஹ் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லை.

الہ کا معنی لغۃ معبود اور اصطلاحا حاجت روا

இலாஹ் என்றால் அகராதிப்படி மஃபூத் - வணக்கத்திற்கு தகுதியானவன். புழக்க பாஷையில் ஹாஜத்ரவா - தேவையைப் பூர்த்தி செய்பவன்.

1.இலாஹ்வுடைய ஜாத் - காயிமுன் பி நஃப்ஸிஹி யாக அதாவது தன்னைக் கொண்டு தானே தரிபட்டிருக்க வேண்டும் அப்படிப்பட்ட ஜாத் அல்லாஹ்வுக்கு மட்டுமே இருக்கிறது.

ஆதாரம் :

"ஹுவல் ஹய்யுல் கய்யூம்" *(குர்ஆன்)*

(காயிமுன் பி நஃப்ஸிஹி, காயிம் ப குத்,காயிம் பிஜ்ஜாத் மூன்றுக்கும் ஒரே பொருள் ஆகும்)

2.இலாஹ்வுடைய ஸிஃபாத் :

அவை காமிலானவைகளாக இருக்க வேண்டும். நக்ஸ் இல்லாது இருக்க வேண்டும் அப்படிப்பட்ட ஸிஃபாத் அல்லாஹ்வுக்கு மட்டுமே இருக்கிறது.

<u>ஆதாரம்-</u>

'ஸுப்ஹானல்லாஹி அம்மா யஸிஃபூன்'

'லஹுல் அஸ்மாஉல் ஹுஸ்னா' (குர்ஆன்)

3.இலாஹ்வுடைய அஃப்ஆல் :

அவன் தனது செயல்களில் ஜாத்தி குவ்வத்- சுய சக்தியைக் கொண்டவனாக இருக்க வேண்டும். அல்லாஹ் மட்டுமே சுய சக்தி உள்ளவனாக இருக்கிறான்.

<u>ஆதாரம்:</u>

''லா குவ்வத்த இல்லா பில்லாஹ்''

''அன்னல் குவ்வத்த லில்லாஹி ஜமீஆ'' (குர்ஆன்)

4.இலாஹ்வுடைய ஆஸார் :

அவன் சகல லோகங்களுக்கும் அதிலடங்கிய அனைத்திற்கும் சொந்தக்காரனாக இருக்க வேண்டும்.அல்லாஹ் மட்டுமே அப்படி இருக்கிறான்.

<u>ஆதாரம் :</u>

லஹுல் முல்க்குஸ் ஸமாவாத்தி வல் அர்ழி வமா பய்னஹுமா (குர்ஆன்)

இத்தகைய இஃதிபாராத்துகள் நான்கும் அல்லாஹ் ஒருவனுக்கு தான் இருக்கின்றன. எனவே அல்லாஹ் மட்டும் தான் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும். எனவே அல்லாஹ் மட்டுமே வணக்கத்திற்கு தகுதியானவனாக இருக்கிறான்.

இர்ஷாதாத் (ارشادات)

ஸூபூத்தே கல்க் அதாவது அப்துடைய ஸூபூத் ஹக்குடைய இல்மில் அம்ரே வாக்கயீயாக உண்மையாகவே இருக்கிறது. இன்னும் கைரே ஜாத்தே ஹக்காக இருக்கிறது. இல்முடைய மர்த்தபாவில் ஹக்கால் அறியப்பட்ட இந்த கைரியத் எடுபடவே முடியாது. இதை கைரியத்தே ஜாத்தி என்றும் கைரியத்தே வாக்கயீ என்றும் சொல்கிறார்கள். இந்த மர்த்தபாவுடைய அடிப்படையில் சிருஷ்டிகள் மற்றும் அடிமைகளுடைய நேஸ்த்தி ஜாத்தியாக இருக்கிறது. எந்த வகையிலும் உஜூதுடைய- ஹஸ்த்தியுடைய வாடையைக்கூட நுகரவில்லை. இந்த மகாமை பொருத்து தான் ஷெய்கே அக்பர்(ரஹ்)

அல் அஃயானு மா ஷம்மத் ராஇஹத்தல் உஜூத் اَلْاَعْيَانُ مَا شَمَّتْ رَائِحَةَ الْوُجُوْدِ

அதாவது அஃயானே ஸாபிதா இல்முடைய மகாமில் உஜூதுடைய வாடையை நுகரவில்லை என்று சொல்லி யிருக்கிறார்கள்.

இதே விதமாக மர்த்தபயே ஜூஹூரை அதாவது அதே அஃயானே ஸாபிதாவுடைய ஜூஹூரை அஃயானே காரிஜியா என்று சொல்கிறார்கள். அஃயானே ஸாபிதா ஹக்குடைய நூருடைய பர்த்தவைக் கொண்டு மவ்ஜூதே இழாஃபியாக ஆகிவிட்டது.

இவைகளுக்கு உஜூத் இரவல் அருளப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு தான் இவைகள் தோற்றத்தில் காட்சியளிக்கின்றன. மேலும் இவைகளுக்கு இரவலான உஜூதுடைய தஜல்லி தாயிமாகவும் அபதீயாகவும் இருக்கிறது. இந்த இஃதிபாரைக் கொண்டு தான் (ஸஜா) தண்டனையும் (ஜஸா) நற்கூலியும் தரிபட்டிருக்கிறது. மேலும் ஜூஹூருடைய இஃதிபாரைக் கொண்டு இலாஹ்வுடைய ஐனியத்தும் மஇயத்தும் உறுதியாகிறது.

இஸ்திலாஹி தஃரீஃப்

1. **தீன்** - மன்ஷயே ஹக்
2. **தாத் (ஜாத்)** - மர்ஜயே அஸ்மா வஸிஃபாத்- பெயரும் தன்மைகளும் மீளும் இடம்
3. **ஸிஃபாத்** - கமாலாத்தே ஜாத் - ஜாத்தின் தன்மைகள் திறமைகள்
4. **அஃப்ஆல்** - ஜுஹூரே ஸிஃபாத் - ஸிஃபாத்தின் வெளிப்பாடு
5. **ஆஸார்**- நதீஜயே அஃப்ஆல்- அஃப்ஆலின் விளைவுகள்
6. **உஜூத் (வஜூத்)** - மா பிஹில் மவ்ஜூதியத்- எதைக் கொண்டு ஒரு வஸ்து தரிப்பட்டிருக்கிறதோ அது
7. **ரப்பு**-ருபூபியத்தின் சொந்தக்காரன்-ஷய்யே நாகிஸ் கோ அலத்தர்த்தீப் (தத்ரீஜன்) காமில் பனானே வாலா- குறைபாடுள்ள சிருஷ்டியை சன்னஞ்சன்னமாக பூரணமாக்குபவன்(அதன் உச்சிக்கு கொண்டு செல்பவன்)
8. **ஸிஃபாத்தே ஜாத்தியா**-முஸ்பித் ஜாத்தே கைர்
9. **ஸிஃபாத்தே அஃப்ஆலியா**- தாலிப் உஜூதே கைர்

சொற்பொருள்

1.அகீதா عَقِيْدَةٌ	கொள்கை
2.அதம் عَدَمٌ	இல்லாமை
3.அதமே இழாஃபி عَدَمِ اِضَافِيْ	உஜூத் உறியப்பட்டது.உஜூதில் வரும் சலாஹியத்துடையது
4.அம்ஸால் اَمْثَالٌ	தோற்றங்கள்- மிஸ்ல் என்பதன் பன்மை
5.இஃதிபார் اِعْتِبَار	கண்ணோட்டம்
6.இஃப்ராத் اِفْرَاطٌ	வரம்பு மீறுதல்-கூடுதல் செய்தல்
7.இக்தியார் اِخْتِيَارٌ	சுயவிருப்பம்
8.இக்rார் اِقْرَارٌ	மொழிதல்
9.இன்திராஜ் اِنْدِرَاجٌ	உள்ளே நுழைதல், உள்ளே அடங்குதல்
10.இஃதிஸாம் اِعْتِصَامٌ	பற்றிப்பிடித்தல்
11.இஸ்திஆனத் اِسْتِعَانَةٌ	உதவி தேடுதல்
12.இஸ்திலாஹ் اِصْطِلَاحٌ	புழக்க பாஷை,வழக்கு சொல்
13.இஸ்பாத் اِثْبَاتٌ	தரிபடுத்துதல்
14.உசூல் اُصُوْلٌ	அடிப்படைகள் -அசல் என்பதன் பன்மை
15.உஜூத் وُجُوْدٌ	உள்ளமை
16.ஐனியத் عَيْنِيَةٌ	ஒன்றுபடுவது
17.ஔஸத் اَوْسَطُ	நடுநிலை
18.கஷ்ஃப் كَشْفٌ	உள்ளுணர்வு, கல்பில் உதிப்பு ஏற்படல்

19.குத் ஸனாஸி خُوْدْشَنَاسِى	தன்னை அறிதல்
20.குர்பு قُرْبٌ	நெருக்கம்
21.கைரியத்துன் غَيْرِيَّةٌ	வேறுபடுவது
22.சிஃபாத்துன் صِفَاتٌ	தன்மைகள்- சிஃபத் என்பதன் பன்மை
23.சூரத்துன் صُوْرَةٌ	தோற்றம்
24.ஸுபூத் ثُبُوْتٌ	தரிபாடு
25.தாத் ذَاتٌ	குறிப்பான ஒரு பொருள்
26.தவஜ்ஜுஹ் تَوَجُّهٌ	கவனிப்பது
27.தஃதீல் تَعْطِيْلٌ	இறைவனுக்கு வேலை இல்லாமல் ஆக்குவது
28.தஃப்ரீத் تَفْرِيْطٌ	குறைவு ஏற்படுத்துதல், குறை கூறுதல்
29.தஷ்ரீக் تَشْرِيْكٌ	ஷிர்க்- இணை வைக்குதல்
30.தவ்ஹீத் تَوْحِيْدٌ	ஒன்றுபடுத்துல்
31.தக்லீத் تَقْلِيْدٌ	பின்பற்றுதல்
32.தஹ்கீக் تَحْقِيْقٌ	உறுதி செய்தல்
33.தஜத்துத் تَجَدُّدٌ	புதிப்பித்தல்
34.தஜல்லி تَجَلِّى	வெளிப்பாடு
35.தஜ்கியத் تَزْكِيَةٌ	தூய்மையாக்குதல்
36.நஃபி نَفِى	மறுத்தல், நிராகரித்தல்
37.நாகிஸ் نَاقِصٌ	குறைவுள்ளது
38.நிஸ்பத் نِسْبَةٌ	தொடர்பு
39.நுமூத் نُمُوْدٌ	காட்சி தருதல்
40.நைப்பன் نَيْس	இல்லாமை
41.பர்தவ் پَرْتَوْ	சுடர், நிழல்

42. பகா بَقَاءٌ	நிலைபாடு
43. ஃபனா فَنَاءٌ	அழிதல்
44. ஃபிஅல் فِعَلٌ	செயல்
45. ஃபைஜான் فَيْضَانٌ	அருள்
46. மன்ஜில் مَنْزِلٌ	தங்குமிடம்
47. மகாம் مَقَامٌ	அந்தஸ்து
48. மஃலூம் مَعْلُوْمٌ	அறியப்பட்டது
49. மஃதூம் مَعْدُوْمٌ	சொந்த உஜூத் இல்லாதது
50. முத்தஸிஃப் مُتَّصِفٌ	பரிபூரணமாய் நிரம்பியது
51. மவ்ஜூத் مَوْجُوْدٌ	தரிபட்டிருப்பது
52. மர்தபா مَرْتَبَةٌ	பதவி, படித்தரம், அந்தஸ்து
53. மர்ஜஃ مَرْجَعٌ	மீளுமிடம்
54. மஸ்லக் مَسْلَكٌ	(தனி) நடைமுறை
55. மஸ்த் مَسْتٌ	தன்னை மறந்த நிலை
56. முத்லக் مُطْلَقٌ	பொதுவானது
57. முகய்யத் مُقَيَّدٌ	வரையறைக்கு உட்பட்டது
58. முர்ஷித் مُرْشِدٌ	வழிகாட்டுபவர், ஷைகு
59. முஹ்தாஜ் مُحْتَاجٌ	தேவையுள்ளது
60. யாத் يَادْ	நினைவு
61. யாஃப்த் يَافْتْ	அடைவது
62. ராஹ் رَاهْ	பாதை
63. ருக்னு رُكْنٌ	பகுதி
64. ருபூபிய்யத் رُبُوْبِيَّةٌ	வளர்த்து பரிபாலனம் செய்தல்
65. ஹக் ஸனாஸி حَقْ شَنَاسِي	இறைவனை அறிதல்

66.ஹைப்பன் هَيْپَن	இருக்குதல்
67.ஹகீகத் حَقِيْقَةٌ	உண்மை நிலை, அந்தரங்கம்
68.ஹஸ்தி هَسْتِيْ	இருக்குதல்
69.ஹரகத் حَرَكَةٌ	அசைவு
70.ஜப்ர் جَبْرٌ	நிர்ப்பந்தம்
71.ஜாயிஸ் جَائِزٌ	அனுமதிக்கப்பட்டது
72.ஜுஹூர் ظُهُوْرٌ	வெளிப்பாடு, தோற்றமளித்தல்

	அல்லாஹ்	**அடியான்**
தாத்	காயிம் பகுத்	அதம்
சிபாத்	காமில்	நாகிஸ்
அப்ஆல்	முக்தார்	மஜ்பூர்
ஆஸார்	மாலிகுல் முல்க்	முஹ்தாஜ்

வினா – விடை

1. *தீன்- மார்க்கம் என்பது என்ன ?*
   விடை : இஸ்லாம்.

2. *இது எவ்வாறு கிடைக்கும் ?*
   விடை : பரிசுத்த திருக்கலிமாவைக் கொண்டு கிடைக்கும்.

3. *நீங்கள் யார் ?*
   விடை : முஸ்லிம்.

4. *உங்களது வேலை என்ன ?*
   விடை : தஸ்லீம்,தஸ்தீக்-சரியான அகாயித் கொள்கை களை ஏற்பதும் மெய்ப்படுத்துவதும் ஆகும். மேலும் அல்லாஹ் ரசூலுடைய செய்திகள் மீது உறுதிகொள்வதும் அவர்களின் கட்டளைகளின் படி நடப்பதும் ஆகும். இதற்கான கூலி இவ்வுலகில் கண்ணியமும், மறு உலகில் வெற்றியும், ஷஃபாஅத்தின் தரஜாத்களும், தீதாரே இலாஹி -இறை தரிசனத்தைப் பெறுவதுமாகும்.

5. *பரிசுத்த திருக்கலிமா அசலில் என்னவாக இருக்கிறது ?*
   விடை : இல்மே ஹக் –ஹக் தஆலாவுடைய இல்மில் இருக்கும் இறை ஞானமாகும்

6. *பரிசுத்த திருக்கலிமாவில் எத்தனை வார்த்தைகள், மற்றும் எழுத்துகள் உள்ளன ?*
   விடை : வார்த்தைகள் – 7 எழுத்துகள் – 24

7. *இந்த எழுத்துகளை எவ்வாறு அழைக்கிறார்கள் ?*
   விடை : நுக்தா - புள்ளிகளற்ற இந்த எழுத்துகளை ஹுரூஃபே நூரி -ஒளிமயமான எழுத்துகள் என்று அழைக்கிறார்கள்.

8. கலிமாவில் எத்தனைப் பகுதிகள் இருக்கின்றன?

விடை : திருக்கலிமாவில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. முதலாவது பிரிவு உலூஹிய்யத்- லா இலாஹ இல்லல்லாஹ்.
இரண்டாவது பிரிவு ரிஸாலத்- முஹம்மதுர் ரசூலுல்லாஹ்

9. திருக்கலிமாவின் பொருள் என்ன?

விடை : வணக்கத்திற்கு தகுதியானவன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறு யாரும் இல்லை. இன்னும் முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய திருத் தூதராக இருக்கிறார்கள்.

10. 'வேறு யாரும்' என்பது திருக்கலிமாவில் எந்த வார்த்தைக்கான பொருளாக வருகிறது?

விடை: திருக்கலிமாவின் தர்கீப் (வாசக இணைப்பிலிருந்து) 'யாரும்' என்ற பொருள் வந்துள்ளது

11. 'வேறு யாரும்' என்பது எதைக் குறிக்கிறது?

விடை : சிருஷ்டிகளை.

12. 'வேறு யாரும்' என்பதற்கான பொருள் சிருஷ்டிகளை ஏன் குறிக்க வேண்டும்?

விடை : ஏனெனில் அல்லாஹ்வைத் தவிர வேறு எதுவெல்லாம் இருக்கிறதோ அவை சிருஷ்டிகள்தான்.

13. அல்லாஹ், இலாஹ் இவை இரண்டிற்கும் வித்தியாசம் என்ன?

விடை : அல்லாஹ் – இஸ்மே ஜாத் (ஜாத்துடைய பெயர்)
இலாஹ் – இஸ்மே வஸ்ஃபி (தன்மைப் பெயர்)

14. யாரேனும் ஒரு மனிதன் அல்லாஹ்வை அல்லாஹ் என்று - அதாவது தன் தானே தரிபாடானவன் என்றும், சிருஷ்டி கர்த்தா என்றும் ஏற்றுக்கொள்கிறான். ஆனால் 'இலாஹ்' என்று ஏற்றுக் கொள்ளவில்லை. அவன் முஸ்லிமா?

விடை : இல்லை. திட்டமாக அவன் காஃபிராகும்.

15. ஏன் ?

விடை : காஃபிர்கள், முஷ்ரிக்குகள் அல்லாஹ்வை அல்லாஹ் என்று- அதாவது தன் தானே தரிபாடானவன் என்றும், சிருஷ்டி கர்த்தா என்றும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். தற்போதும் ஏற்றுக்கொள்கிறார்கள். எனினும் 'இலாஹ்' என்று ஏற்றுக்கொள்வதில்லை. திருக்கலிமாவிலே அல்லாஹ்வை 'இலாஹ்' வாக ஏற்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனவே திருக்கலிமாவின் அழைப்பை ஏற்க மறுப்பது அசல் கலிமாவையே மறுப்பதாகும். அது குஃப்ராகும்.

16. 'இலாஹ்' என்பதன் லஃப்ழி மஃனா-வார்த்தை ரீதியான பொருள், மற்றும் தஃரீஃபி மஃனா-விளக்க ரீதியான பொருள் என்ன ?

விடை : 'இலாஹ்' என்பதன் வார்த்தை ரீதியான பொருள் மஃபூத் (வணக்கத்திற்குத் தகுதியானவன்)
'இலாஹ்' என்பதன் விளக்க ரீதியான பொருள் முஹ்தாஜ் இலைஹி (தேவைகளைப் பூர்த்தி செய்பவன்)

17. முஹ்தாஜ் இலைஹி என்றால் யார் ?

விடை : எவன் தான் தேவையற்றிருந்து பிறரின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறானோ அவனே முஹ்தாஜ் இலைஹி ஆகும்.

18. 'இலாஹ்' என்பதற்கான இஃதிபாராத் (கவனிப்புகள்) எத்தனை ?

விடை : நான்கு

19. அவை யாவை ?

விடை : ஜாத்-உள்ளமை
சிஃபாத்-பண்புகள்
அஃப்ஆல்-செயல்கள்
ஆஸார்-உடமைகள், சொத்து பத்துகள்

20. அவைகளின் தஃப்ஸீல் (விளக்கம்) என்ன ?

விடை : ஜாத் என்றால்- ஜாத் காயிம் ப குத் தாக இருப்பது. அதாவது, தன் தானே தரிபாடாக இருந்து பிறரையும் தரிபடுத்தும் ஜாத் தாக இருப்பது.

சிஃபாத் என்றால் சிஃபாத்தே காமிலா- பரிபூரணப் பண்புகள் அதாவது ஹயாத், இல்ம், இராதா, குத்ரத், சமாஅத், பஸாரத், கலாம் ஆகியவை சுயமாக இருக்குதல்.

அஃப்ஆல் என்றால் தனது செயல்களில் தாத்தி குவ்வத்- சுய சக்தி உள்ளவனாக இருக்குதல்.

ஆஸார் என்றால் தனது சக்தி வல்லமையின் அடையாளங்கள் இருப்பது. எல்லா அகிலங்களும், அதிலுள்ள வஸ்துக்களும் இறைவல்லமையின் அடையாளங்களாகவே உள்ளன. எனவே, அதை ஆஸார் (அடையாளங்கள்) என்று கூறப்படுகிறது.

21. முஷ்ரிக் -இணை வைப்பவர்கள் எவற்றை இலாஹ்வாக ஆக்கினார்கள், இன்னும் ஆக்குகிறார்கள் ?

விடை : அஸ்னாம் (சிலைகள்), அவ்ஸான் (வடிவங்கள்) அதாவது அல்லாஹ் அல்லாத சிருஷ்டிகளை இலாஹ்வாக ஆக்கினார்கள், இன்னும் ஆக்குகிறார்கள்.

22. அஸ்னாம், அவ்ஸான் என்றால் என்ன ?

விடை : இணைவைப்போர் வணங்கக்கூடிய சிலைகள் சனம் (பன்மை-அஸ்னாம்) எனப்படுகிறது.
மேலும் அவர்கள் வணங்ககூடிய உருவங்கள் வஸன் (பன்மை-அவ்ஸான்) எனப்படுகிறது. (சிலுவையைப் போன்று)

23. கலிமா தய்யிபாவில் 'லா' எதை நஃபி செய்கிறது? (மறுக்கிறது) 'இல்லா' எதை இஸ்பாத் செய்கிறது? (தரிபடுத்துகிறது)

விடை : 'லா'என்பது சிருஷ்டிகள் இலாஹ்வாக இருப்பதை நஃபி செய்கிறது. அதாவது ஜாதே

ஷையிலிருந்து வஸ்பே உலூஹியத்தை ஜாத்தன் நஃபி செய்கிறது 'இல்லா' என்பது அல்லாஹ் மட்டுமே இலாஹ் என்று இஸ்பாத் செய்கிறது.

24. திருக்கலிமாவின் கோரிக்கை என்ன ?

விடை : சிருஷ்டிகளை விட்டு நகர்வதும், ஹக்கிலே சேர்வதாகும்.

25. திருக்கலிமாவிலுள்ள 'லா' எந்த வகையைச் சார்ந்தது ?

விடை : லா அய்யு ஷைஇன் இலாஹ இல்லல்லாஹ் அதாவது சிருஷ்டிகளை விட்டும் உலூஹிய்யத்தை நஃபி செய்கிறது.

இதை 'நஃபியே ஜின்ஸ்' (இனத்தை நஃபி செய்யும் 'லா') என்று வைத்தால் இலாஹ் என்பது ஒரு இனம் என்று ஒப்புக் கொள்ள வேண்டியதாகும்.

26. திருக்கலிமாவில் எத்தனை தரஜாக்கள் (படித்தரங்கள்) உள்ளன ?

விடை : 3 தரஜாக்கள் (படித்தரங்கள்) உள்ளன ?

1. தஸ்லீம், தஸ்தீக்,
2. நஜர் வ முஷாஹதா,
3. இல்ம் வ இத்ராக்.

27. திருக்கலிமாவின் பலன் என்ன ?

விடை : திருக்கலிமாவை தஸ்லீம் (ஒப்புக்கொள்வது) இஸ்லாம் ஆகவும்,
அதன் தஸ்தீக் (மெய்ப்படுத்துதல்) ஈமானாகவும்,
அதன் தஹ்கீக் (ஆராய்ச்சி, ஆழ்ந்த அறிவு) இஹ்ஸானாகவும் இருக்கிறது.

28. திருக்கலிமாவில் எவ்விஷயம் கடமையாக்கப்பட்டுள்ளது ?

விடை : தஸ்லீம், தஸ்தீக்
(ஒப்புக்கொள்வதும், மெய்ப்படுத்துவதும்)

29. திருக்கலிமாவில் எவ்விஷயத்தின்பால் ஆர்வம் ஊட்டப்பட்டுள்ளது ?

விடை : தஹ்கீக் (ஆராய்ச்சிப்பூர்வமாக அறிவதும்) இத்ராக் (அடைந்துகொள்வதும்)

30. தஹ்கீக், இத்ராக் செய்வதன் பலன் என்ன ?

விடை : யாஃப்த் வ ஷுஹூத்

31. இவை எங்கே கிடைக்கும் ?

விடை : இவ்வுலகிலேயே.

32. திருக்கலிமா யாரினால் கிடைத்தது ?

விடை : ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கொண்டு.

33. திருக்கலிமாவின் குலாஸா (சுருக்கம்) என்ன ?

விடை : அல்லாஹ்வை மட்டும் இலாஹ்வாக ஒப்புக்கொள்ளுதல்.

34. அல்லாஹ்வை இலாஹ்வாக ஒப்புக்கொண்டால் அல்லாஹ் கிடைப்பானா ?

விடை : ஆம்! அல்லாஹ் கிடைப்பான்.

35. எப்படி ?

விடை : அதை தஹ்கீக் செய்வது (ஆராய்ச்சிப்பூர்வமாக அறிவது) கொண்டு.

36. எவ்வாறு தஹ்கீக் செய்வது ?

விடை : சஹாபாக்கள் திருக்கலிமாவை தஸ்லீம், தஸ்தீக் செய்த பிறகு, 'ஹக் தஆலா எங்களுக்கு சமீபமாக இருக்கிறானா?' என்று கேட்டனர். அதன் பதிலாக ஹக் தஆலாவுடைய குர்பும் (நெருக்கமும்) அக்ரபிய்யதும் (மிக நெருக்கமும்) கிடைத்தது. இதே விதமாகவே ஹக் தஆலாவும் கிடைப்பான்.

37. அதுவோ நபி (ஸல்) அவர்களின் காலமாக இருந்தது. தற்போது அல்லாஹ் எப்படி கிடைப்பான்?

விடை : தற்போதும் முகர்ரபீன் (இறை நெருக்கம் பெற்றவர்கள்), வலிமார்கள், ஆரிப்களிடம் கேட்பது கொண்டு அல்லாஹ்வைப் பெறமுடியும்.

38. தாங்கள் யார்?

விடை : (முகல்லிதான- பொதுவான விடை): அப்துல்லாஹ் - அல்லாஹ்வுடைய அடிமை, அல்லாஹ்வால் உண்டாக்கப்பட்டவன்.

39. எவ்வாறு உண்டாக்கினான்?

விடை : தனது குத்ரத் -வல்லமையைக் கொண்டு.

40. அதன் இரகசியம் என்ன?

விடை : தெரியாது.

41. தாங்கள் யார்?

விடை : (முஹக்கிகானா- ஆராய்ச்சிப்பூர்வமான விடை) மஃலூமே இலாஹி - ஹக்தஆலாவுடைய இல்மிலே உள்ள சூரத் –தோற்றம். ஓவியனின் சிந்தனையிலுள்ள ஓவியங்களைப்போல. எழுத்தாளனின் சிந்தனையிலுள்ள எழுத்துகளைப்போல.

42. தங்களின் வெளிப்பாடு -ஜுஹூர் எப்படி ஆனது ?தாங்கள் எப்படி உண்டானீர்கள்?

விடை : ஹக்குடைய உஜூத் இன்னும் நூருடைய பர்த்தவ் -சுடரைக் கொண்டு. மையிலிருந்து எழுத்துகள் உண்டாவது போல. வெளிப்படுவது போல.

43. உஜூத் என்றால் என்ன?

விடை : சூஃபியாக்களுடைய புழக்க பாஷையில் உஜூத் என்பது அல்லாஹ்வுடைய ஹஸ்தி -உள்ளமைக்குச் சொல்லப்படும்.

44. சிருஷ்டிகளுக்கு நம் பேரில் உள்ள ஹக் -கடமைகள்) என்ன ?

விடை : அகிலத்திலுள்ள ஒவ்வொரு அணுவும் மனிதனுக்காகவே படைக்கப்பட்டுள்ளன.

أَلَمْ تَرَوْا أَنَّ اللهَ سَخَّرَ لَكُمْ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ

45. நமக்கு சிருஷ்டிகளின் பேரில் உள்ள ஹக் -கடமைகள் யாது ?

விடை : நமது கடமை, துன்யாவிலுள்ள எவ்வஸ்துவின் மீதும் பேராசையான பார்வை பார்க்கலாகாது. மாறாக அரச பார்வை பார்க்க வேண்டும். வெறுப்பான பார்வை செலுத்த வேண்டும். பொறாமைக்காரர்களைப் போன்று பார்க்கலாகாது. ஏனெனில் அல்லாஹுத் தஆலா எல்லா மனிதர்களுக்கும் இவ்வஸ்துக்களைத் தர சக்தி பெற்றவனாக இருக்கிறான்.

وَلِلّٰهِ مُلْكُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَاللهُ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

46. நம் இருவருக்கும் (மனிதர்கள், ஜின்களுக்கு) ஹக்தஆலாவின் பேரில் உள்ள கடமை என்ன ?

விடை : நாம் அல்லாஹ்வை வணங்க வேண்டும். இன்னும் இறை ஞானங்களைப் பெற வேண்டும்.

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ

47. ஹக்தஆலாவிற்கு நம்பேரில் உள்ள ஹக் என்ன ?

விடை : அல்லாஹுதஆலா நம்மை பரிபாலிக்கக் கூடியவனாவும், சதாவும் உதவக்கூடியவனாகவும் இருக்கிறான்.

وَاللهُ خَيْرُ الرَّازِقِينَ وَهُوَ خَيْرُ النَّاصِرِينَ

48. சிருஷ்டிகள் எவ்வாறு உண்டானது ?

விடை : ஹக் தஆலாவுடைய இல்ம், இராதத்தைக் கொண்டு.

49. அல்லாஹ் எங்கே இருக்கிறான் ?

விடை : எனது சூரத்தில் (தோற்றத்தில்) வெளியாகி இருக்கிறான்.

50. அல்லாஹ் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறான்?

விடை : காயினாத் கா ஐன் ஹோ கர் உன் கீ இக்திழா கோ ஜாஹிர் கர் ரஹா ஹே.

அகிலமனைத்திற்கும் அய்னாக இருந்து, அவைகளின் இக்திழாவை வெளியாக்கிக் கொண்டிருக்கிறான்.

51. மக்லூக் –சிருஷ்டி என்பது என்ன?

விடை: படைக்கப்படுவதற்கு முன்னால் மஃலூமுல்லாஹ் ஆகவும், படைக்கப்பட்ட பின்பு தன்னுடைய ஜாத்தை கவனித்து மஃதூமாகவும், ஹக்குடைய உஜூதைக்கொண்டு மவ்ஜூதாகவும் இருக்கிறது.

52. அல்லாஹ்வின் உஜூதைக் கொண்டுதான் நாம் வெளியாகிஇருக்கிறோம் என்பதற்கு ஆதாரம் என்ன?

பதில்;அவனது உலூஹியத்தின் தன்மைகள் நம்மிலே வெளியாகி உள்ளன. (உஜூத், சிபாத் ,அப்ஆல்,ஆஸாரின் சுடர்கள் நம்மிலே பிரதிபளிக்கின்றன.)

1.இவற்றை நாம் நம்முடையது என்று எண்ணினால் அது கஸ்ப் غَضَبْ (அபகரிப்பு), இன்னும் குப்ர் ஆகும்.

2. இவற்றை நம்முடையது இன்னும் ஹக்குடையது என்று எண்ணினால் அது ஷிர்க் இன்னும் கியானத்(மோசடி) ஆகும்.

3.இவற்றை ஹக்குடையது, இன்னும் நம்மிலே அமானிதமாக இருக்கிறது என்று எண்ணினால் அது தவ்ஹீத் ஆகும்.

4.இவற்றை ஹக்குடையது, இன்னும் ஹக்கிலே தான் தாத்தீயாகவும் அசலீயாகவும் இருக்கிறது என்று எண்ணினால் அது தவ்ஹீத் ஹகீகி ஆகும்.(ப இஃதிபாரே இஸ்திர்தாதே அமானத்- அமானிதத்தை ஒப்படைக்கும் முறையில்)

காதிரிய்யா சில்சிலா

	காதிரிய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம் - தேதி	அடக்கஸ் தலம்
1	இருலோக ரட்சகர் ரஹ்மத்துல்லில் ஆலமீன் முஹம்மது நபி [ஸல்]	11	ரபிவுல் அவ்வல் 12 திங்கள்	மதீனா முனவ்வரா
2	பாபுல் இல்ம் சையிதுனா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு	40	ரமலான் 21	நஜப்
3	ஹஜ்ரத் காஜா ஹஸன் பஸரீ [ரஹ்]	111	முஹர்ரம் 4 செவ்வாய்	பஸரா
4	ஹஜ்ரத் ஷைகு ஹபீப் அஜமி [ரஹ்]	120	ரமலான் 9	பஸரா
5	ஹஜ்ரத் அபூ சுலைமான் தாவூத் இப்னு நஸீர் தாயீ [ரஹ்]	162	ரமலான் 9	பக்தாத்
6	ஹஜ்ரத் அபூ மஹ்பூஜ் மஃரூப் இப்னு பைரோஸ் கர்கீ [ரஹ்]	200	முஹர்ரம் 2 ஞாயிறு	பக்தாத்
7	ஹஜ்ரத் அபுல் ஹஸன் சிர்ரீ இப்னு முஃப்லிஸ் ஸிக்தீ [ரஹ்]	250	ரமலான் 3 செவ்வாய்	பக்தாத்
8	[அவர்களின் சகோதரியின் மகன்] ஹஜ்ரத் அபுல்காசிம் ஜுனைத் இப்னு முஹம்மத் சுஜாஜ் பக்தாதி [ரஹ்]	297	ரஜப் 27 சனிக் கிழமை	பக்தாத்
9	ஹஜ்ரத் அபூபக்கர் ஷிப்லி[ரஹ்]	334	துல் ஹஜ் 27 ஜும்ஆ	பக்தாத்

10	ஹஜ்ரத் அப்துல் அஜீஸ் ஸுஹைல் யமனி [ரஹ்]	336	துல் ஹஜ் 11 வியாழன்	யமன்
11	ஹஜ்ரத் அபுல் பள்ல் அப்துல் வாஹித் யமனி [ரஹ்]	425	ஜமாதுல் ஆகிர்- 9 ஜும்ஆ	பக்தாத் இமாம் ஹன்பல் அவர்களின் மக்பரா
12	ஹஜ்ரத் அபுல் ஃபரஹ் யூசுப் தர்தூஸி [ரஹ்]	447	முஹர்ரம் 5 சனி	தர்தூஸ்
13	ஹஜ்ரத் அபுல்ஹஸன் அலிய்யுல் குரஷிய்யுல் ஹன்காரீ [ரஹ்]	486	-	ஹன்கார்
14	ஹஜ்ரத் அபூ சயீத் இப்னு முபாரக் மக்ஸூமீ [ரஹ்]	513	ரபீவுல் ஆகிர்11 திங்கள்	பக்தாது [வாசிதா]
15	**ஹஜ்ரத் குத்புல் அக்தாப் ஷைகு முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜிலானி [ரஹ்]**	561	ரபீவுல் ஆகிர் 11	பக்தாத்
16	[அவர்களின் மகன்] ஹஜ்ரத் ஷைகு அப்துர் ரஜ்ஜாக் [ரஹ்]	595	ஷவ்வால் 6	பக்தாத் [பாபுல் ஹரப்]
17	[அவர்களின் சகோதரர்] ஹஜ்ரத் சையித் அபூ நசீர் பீர் [ரஹ்]	618	ஜமாதுல் ஆகிர்- 1	திமிஷ்க்
18	ஹஜ்ரத் சையித் அபூ சாலிஹ் இப்னு அப்துர் ரஜ்ஜாக் [ரஹ்]	699	ஷஃபான் 18	மதீனா முனவ்வரா
19	ஹஜ்ரத் சையத் ஷைகு அஹ்மத் [ரஹ்]	-	-	மதீனா முனவ்வரா
20	ஹஜ்ரத் சையித் முஹம்மத் இப்னு அஹ்மத் [ரஹ்]	-	-	மதீனா முனவ்வரா
21	ஹஜ்ரத் சையித் நசீருத்தீன் [ரஹ்]	-	-	-
22	ஹஜ்ரத் சையித் நூருத்தீன் [ரஹ்]	851	-	-

23	ஹஜ்ரத் சையித் ஷாஹ் இனாயத்துல்லாஹ் [ரஹ்]	-	-	-
24	ஹஜ்ரத் சையித் ஷுஜாஃ [ரஹ்]	-	-	-
25	ஹஜ்ரத் ஹாஜி சையித் இஸ்ஹாக் சிஷ்தி பாபா ஷாஹ் காதிரி [ரஹ்]	982	-	காலகீ (குல்பர்கா)
26	ஹஜ்ரத் ராஜி முஹம்மத் ஹுஸைனி கட்டா நவாஜ் [ரஹ்]	1090	ஜமாதுல் ஆகிர் 3	நாகூர் (குல்பர்கா)
27	ஹஜ்ரத் ஜுனைதே ஸானி ஆஷிகே ரப்பானி ஹுஸைனி ஷூ ஹரவர்தீ தபகாதீ [ரஹ்]	985	-	பீஜப்பூர்
28	ஹஜ்ரத் ஷாஹ் ஹிதாயத்துல்லாஹ் அய்னீ [ரஹ்]	1018	-	ஜஹ்ராபூர்
29	ஹஜ்ரத் சையித் கமாலுத்தீன் [அவ்வல்] புகாரி [ரஹ்]	-	-	தாலாப் குரம்குண்டா சித்தூர்
30	[அவர்களின் மகன்] ஹஜ்ரத் சையித் ஜமாலுத்தீன் [ரஹ்]	1162	-	ஜமால் யக்கா [ராய் சுட்டி]
31	[அவர்களின் மகன்] ஹஜ்ரத் சையித் முஹம்மத் ஹுஸைனி ஷாஹ்மீர் [ரஹ்]	1186	ஜமாதுல் ஆகிர் 1	கத்ரீ அனந்தப்பூர்
32	[அவர்களின் சகோதரர்] சையித்ஷாஹ் கமாலுத்தீன் [ஸானி] ஷம்ஃ கான்தானே சிஷ்த்- ஷாஹ் கமால் [ரஹ்]	1224	ஸபர் 11	தாலாப் -குரம்குண்டா
33	ஹஜ்ரத் சையித் அலாவுத்தீன்[ரஹ்]	1251	-	டிரங்ரோடு ராய் சுட்டி [கடப்பா]

34	[அவர்களின் மகனார்] சையித் புர்ஹானுத் தீன் ஹக்கானி ஹக்நுமா[ரஹ்] [ஷாஹ் கமால்(ரஹ்) அவர்களின் மருமகன்]	1290	ரமலான் 29	டிரங்ரோடு ராய் சுட்டி
35	ஹஜ்ரத் சையித் சுல்தான் மஹ்மூதுல்லாஹ் ஷாஹ் ஷாஹ்ஜீ நக்சபந்தீ	1311	துல்ஹஜ் 7	ஹைதராபாத் அப்ஜல் கன்ஜ் [தவா கானா உஸ்மானியா பின்புறம்]
36	ஹஜ்ரத் கமாலுத்தீன் ஷாஹ் மச்லீவாலே ஷாஹ்[ரஹ்]	1351	ரபீவுல் ஆகிர் 29 வியாழன்	ஹைதராபாத் காசீகோடா
37	ஹஜ்ரத் கன்சுல் இர்பான் பீர் கௌஸி ஷாஹ் அக்பரி[ரஹ்]	1373	ஷவ்வால் 4 ஞாயிறு	மஸ்ஜிதே கரீமுல்லா ஷாஹ் பேகம் பஜார் ஹைதராபாத்
38	ஹஜ்ரத் நூருல் மஷாயிக் அஹ்மத் முஹ்யித்தீன் சையித் நூரி ஷாஹ்[ரஹ்]	பிறப்பு 1322 துல்கஅதா28	மறைவு 1411 ரபீவுல் ஆகிர் 14 சனி	ஹைதராபாத்
39	ஹஜ்ரத் ஷம்சுல் ஆரிபீன் அப்துல் பஷீர் பைஜிஷாஹ் நூரி [ரஹ்]	பிறப்பு 1344 துல்ஹஜ் 16 திருப்பந் துருத்தி 26.6.1926	மறைவு 1426 ரஜப்20 வெள்ளி 26.8.2005	லால் பேட்டை

சிஷ்தியா சில்சிலா

	சிஷ்தியா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்-தேதி	அடக்கஸ் தலம்
1	இருலோக ரட்சகர் ரஹ்மத்துல்லில் ஆலமீன் முஹம்மது நபி(ஸல்)	11	ரபீவுல் அவ்வல் 12 திங்கள்	மதீனா முனவ்வரா
2	சையிதுனா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹூ	40	ரமலான் 21	நஜப்
3	சையிதுனா காஜா ஹஸன் பஸரீ(ரலி)	111	முஹர்ரம்-4 செவ்வாய்	பஸரா
4	ஹஜ்ரத் அப்துல் வாஹித் இப்னு ஜைது(ரஹ்)	177	ஸபர் 27 புதன்	பஸரா
5	ஹஜ்ரத் அபூஅலி புளைல் இப்னு இயாழ் (ரஹ்)	187	ரபீவுல் அவ்வல் 3 ஜீம்ஆ	மக்கா முகர்ரமா
6	ஹஜ்ரத் சுல்தான் இப்ராஹீம் இப்னு அத்ஹம் பல்கீ (ரஹ்)	261	ஜமாதுல் அவ்வல் 28 ஜும்ஆ	மர்அஸ் (ஷாம்)
7	ஹஜ்ரத் சதீதுத்தின் ஹுதைபத்துல் மர்அஷிய்யி (ரஹ்)	277	ஷவ்வால் 24 ஞாயிறு	மர்அஷ் (ஷாம்)
8	ஹஜ்ரத் காஜா அமீனுத்தின் அபுஹுபைரா பஸரீ (ரஹ்)	277	ஷவ்வால் 7	பஸரா
9	ஹஜ்ரத் மிம்ஷாத் அலி தைனூரி (ரஹ்)	298	முஹர்ரம் 14 புதன்	தைனூர்
10	காஜா இப்றாஹீம் அபூ இஸ்ஹாக் ஷாமீ (ரஹ்)	329	ரபீவுல் ஆகிர்-14	அக்கா (ஷாம்)
11	ஹஜ்ரத் குத்வதுத்தீன் அபீ அஹ்மத் (ரஹ்)	355	ஜமாதுஸ் ஸானீ-1 திங்கள்	சிஷ்த் (குராசான்)

12	(அவர்களின் மகனார்) ஹஜ்ரத் காஜா அபூ முஹம்மது(ரஹ்)	411	ரஜப் - 1 செவ்வாய்	சிஷ்த்
13	(அவர்களின் சகோதரரின் மகன்) ஹஜ்ரத் நாசிருத்தீன் அபூயூசுப் (ரஹ்)	459	ரஜப் 3 திங்கள்	சிஷ்த்
14	[அவர்களின் மகன்] ஹஜ்ரத் காஜா குதுபுத்தீன் மவ்தூத் (ரஹ்)	527	ரஜப் 1 ஜும்ஆ	சிஷ்த்
15	ஹஜ்ரத் ஹாஜீ ஷரீஃப் சிந்தனீ (ரஹ்)	612	ரஜப் 10 புதன்	புகாரா
16	ஹஜ்ரத் காஜா உஸ்மான் ஹாரூனீ (ரலீ)	617	ஷவ்வால் 5 திங்கள்	கஃபாவுக்கு எதிரில்
17	**ஹஜ்ரத் குதுபுல்ஹிந்த் காஜா முயீனுத்தீன் ஹஸன் ஸன்ஜரீ அஜ்மீரீ (ரஹ்)**	627	ரஜப் 6 திங்கள்	அஜ்மீர்
18	ஹஜ்ரத் குத்புத்தீன் பக்தியார் காகீ (ரஹ்)	633	ரபீவுல் அவ்வல் 14 திங்கள்	டில்லி
19	ஹஜ்ரத் பரீதுத்தீன் கன்ஜஷகர் (ரஹ்)	664	முஹர்ரம் 5 செவ்வாய்	பாக்பட்டன்
20	ஹஜ்ரத் நிஜாமுத்தீன் மஹ்பூப் இலாஹி (ரஹ்)	725	ரபீவுல் ஆகிர் 18	டில்லி
21	ஹஜ்ரத் நசீருத்தீன் மஹ்மூத் சிராஹ் தஹ்லவி (ரஹ்)	757	ரமலான் 18	டில்லி
22	ஹஜ்ரத் சையத் மஹ்மூத் பந்தே நவாஜ் கேசுதராஸி (ரஹ்)	825	துல்கஃதா 18	குல்பர்கா
23	ஹஜ்ரத் சையத் ஜமாலுல்லாஹ் ஷாஹ் மக்ரிபீ (ரஹ்)	827	ரஜப் 10 ஜும்ஆ	குல்பர்கா
24	ஹஜ்ரத் கமாலுத்தீன் வாஹிதுல் அஸ்ரார் பயாபானீ (ரஹ்)	867	-	குல்பர்கா
25	ஹஜ்ரத் சையத் மீரான்ஜீ ஷம்சுல் உஷ்ஷாக் (ரஹ்)	904	ஷவ்வால் 25	பீஜப்பூர்
26	ஹஜ்ரத் புர்ஹானுத்தீன் ஜானம் (ரஹ்)	992	ஜமாதுல் ஆகிர் 15	பீஜப்பூர்

27	ஹஜ்ரத் ஹா ஜி சையத் இஸ்ஹாக் சிஷ்தி (ரஹ்)	982	-	காலகீ குல்பர்கா
28	ஹஜ்ரத் ராஜி முஹம்மத் ஹுஸைனி கட்டா நவாஜ் (ரஹ்)	1090	ஜமாதுல் ஆகிர் 3	நாகூர் குல்பர்கா
29	ஹஜ்ரத் ஜுனைதே ஸானி ஆஷிகே ரப்பானி ஹுஸைனி ஷுஹரவர்தீ தபகாதீ (ரஹ்)	985	-	பீஜப்பூர்
30	ஹஜ்ரத் ஷாஹ் ஹிதாயத் துல்லாஹ் அய்னீ (ரஹ்)	1018	-	ஜஹ்ராபூர்
31	ஹஜ்ரத் சையித் கமாலுத்தீன் அவ்வல் புகாரீ (ரஹ்)	-	-	தாலாப் குரம் குண்டா சித்தூர்
32	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் சையித் ஜமாலுத்தீன் (ரஹ்)	1162	-	ஜமால் யக்கா (ராய் சுட்டி)
33	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் சையித் முஹம்மத் ஹுஸைனி ஷாஹ்மீர் (ரஹ்)	1186	ஜமாதுல் ஆகிர் 1	கத்ரீ (அனந்தப் பூர்)
34	(அவர்களின் சகோதரர்) சையித் ஷாஹ் கமாலுத்தீன் (ஸானி) ஷம்ஃ கான் தானே சிஷ்த், ஷாஹ் கமால் (ரஹ்)	1224	ஸபர் 11	தாலாப்-குரம் குனடா
35	ஹஜ்ரத் சையித் அலாவுத்தீன் (ரஹ்)	1251	-	டிரங்ரோடு ராய்சுட்டி (கடப்பா)
36	(அவர்களின் மகனார்) ஹஜ்ரத் சையித் புர்ஹானுத்தீன் ஹக்கானி ஹக்நுமா (ரஹ்) (ஷாஹ் கமால் (ரஹ்) அவர்களின் மருமகன்)	1290	ரமலான் 29	டிரங்ரோடு ராய்சுட்டி
37	ஹஜ்ரத் சையித் சுல்தான் மஹ்மூதுல்லா ஷாஹ் நக்சபந்தி	1311	துல்ஹஜ் 7	ஷஹதராபாத் அப்ஜல் கன்ஜ் (தவாகானா உஸ்மானியா பின்புறம்)
38	ஹஜ்ரத் கமாலுல்லாஹ் ஷாஹ் மச்லீ வாலே ஷாஹ் (ரஹ்)	1351	ரபீவுல் ஆகிர் 29 வியாழன்	ஹைதராபாத் காசிகோடா

39	ஹஜ்ரத் கன்ஜுல் இர்பான் பீர் கௌஸி ஷாஹ் அக்பரி (ரஹ்)	1373	ஷவ்வால் 4 ஞாயிறு	மஸ்ஜிதே கரீமுல்லா ஷாஹ், பேகம் பஜார் ஹைதராபாத்
40	ஹஜ்ரத் நூருல் மஷாயிக் அஹ்மத் முஹ்யித்தீன் சையித் நூரி ஷாஹ் ஷாஹ் (ரஹ்)	பிறப்பு 1322 துல்கஅதா 28	மறைவு1411 ரபீவுல் ஆகிர் 14 சனி	ஹைதராபாத்
41	ஹஜ்ரத் ஷம்சுல் ஆரிபீன் ஷைகுல் அரபி வல் அஜம் அப்துல் பஷீர் பைஜிஷாஹ் நூரி வஸிஅத் பைஜானுஹு (ரஹ்)	பிறப்பு 1344 துல்ஹஜ் 16 திருப்பந் துருத்தி 26.6.1926	மறைவு1426 ரஜப்20 வெள்ளி 26.8.2005	லால்பேட்டை